**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.136 /2022**

**24.06.2025**

**P.W.1- ராஜலட்சுமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சொத்தில் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் நான்கு மால், சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. 9 ஏக்கருக்கு மேல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் வேறு வேறு இடங்களில் உள்ளன. எனது தாயார் ஆரஞ்சி (எ) சகுந்தலா ஆவார். எனது அம்மா உயிருடன் இருக்கும்வரையில் பங்கு கேட்கவில்லை என்றால் சரியல்ல. கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள். தாவா சொத்துக்கள் எனது தாத்தா, பாட்டிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக மற்றும் கிரைய பாத்திய சொத்துக்கள் ஆகும். எனது தாத்தா பெயர் பெரியகருப்பத்தேவர் மற்றும் பாட்டி பெயர் காத்தம்மாள் ஆகும். எனது தாத்தா இறப்பதற்கு முன்பு அவரது மூத்த மகன் நமச்சிவாயம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாத்தா, அவரது மூத்த மகன் நமச்சிவாயம், அவரது வாரிசுகள் சேர்ந்து 1987 மற்றும் 1995ம் ஆகிய வருடங்களில் 7, 8 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை இரண்டு கிரையப்பத்திரங்கள் மூலம் கிரையம் கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. கூட்டாக தான் அனுபவம் செய்து வந்தார்கள். மேற்படி கிரையம் வாங்கிய சொத்துக்களை 7, 8 பிரதிவாதிகள் அனுபவம் செய்து அவர்கள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய்யாக கூட்டாக அனுபவம் செய்வதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் தொடர்பாக எனது அம்மாவுக்கு தெரியும் என்பதால் தான் அவர் உயிருடன் இருக்கும் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா கிரையம் கொடுத்து 12 வருடத்திற்குள் எனது தாயார் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும், ஆனால் 35 வருடங்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் எனது

அம்மா கையெழுத்து செய்யாததால் அவருக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எனது தாத்தா, பாட்டியின் கிரைய சொத்துக்கள் எவ்வளவு மற்றும் எனது தாத்தா, பாட்டியின் பூர்வீக சொத்துக்கள் எவ்வளவு என்றால் சரியாக தெிரயாது. எனது பாட்டி வழி பூர்வீக சொத்துக்கள் இல்லையென்றாலும், தாத்தாவின் பூர்வீக சொத்துக்கள் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தா கிரையம் கொடுப்பதற்கு முன்பு தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை 1987ற்கு முன்பே 4ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் ஒத்தி வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தாத்தா மேற்படியார்களுக்கு வாக்கீரலாக பிரித்து கொடுத்ததால் தான் அவர்கள் ஒத்தி வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தாத்தா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் தனது மகன்கள் எழுதிக்கொடுத்த ஒத்தி பத்திரங்களை சான்று செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சின்னக்காளை என்பவரை எனது தாயாருக்கு தெரியும். சின்னக்காளை வகையறா வழக்கு சொத்தில் இடைஞ்சல் செய்தார்கள் என்றால் எனது அம்மா சொல்லி தெரியும். சின்னக்காளை வகையறா மீது எனது தாத்தா பெரியகருப்பத்தேவரும், எனது தாய்மாமன்களும் சேர்ந்து திருமங்கலம் நீதிமன்றத்தில் அ.வ.514-1992 வழக்கை தாக்கல் செய்தார் என்றால் எனது அம்மா சொல்லி கேள்விப்பட்டுள்ளேன். மேற்படி வழக்கு உசிலம்பட்டி நீதிமன்றத்தில் மாறுதலாகி 4ம் பிரதிவாதிக்கும், 4ம் பிரதிவாதி அண்ணன் பிள்ளைகளுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதிக்கும், 4ம் பிரதிவாதி அண்ணன் பிள்ளைகளுக்கும் தான் மேற்படி சொத்து பாத்தியமானது என்றால் சரியல்ல. எனது அம்மாவுடன் 6 நபர்கள் பிறந்தார்கள். அதில் எனது அம்மாவுடன் பிறந்த இரண்டு சகோதரரிகள் உயிருடன் உள்ளார்கள். அவர்களை வழக்கில் சேர்த்துள்ளேன். அவர்கள் என்னடன் சேர்ந்து வாதியாக வழக்கை நடத்தவில்லை என்றால் சரிதான். சின்னக்காளை மீது வழக்கு தாக்கல் செய்த சொத்தை தவிர மற்ற சொத்துக்களை எனது தாத்தா வாக்கிரலாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. சின்னக்காளை மீது வழக்கு தாக்கல் செய்த சொத்துக்களையும் எனது தாயார் வாக்கரலாக தானம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பெருமாள் என்பவரை தெரியும். அவர் தூண்டுதலின் பேரில் தான் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா, எனது தாய்மாமன்கள் எனது

தாயாருக்கு செய்ய வேண்டிய அனைத்து சீர்வரிசைகளையும் முறைப்படி செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது தாய்மாமன் ரகுபதி வாரிசுகள் இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 9வது இலக்க சொத்தை பொருத்து எனக்கு எந்த பாகமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி 9வது இலக்க சொத்தை 4ம் பிரதிவாதி, அவரது மனைவிக்கு தானம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவரது மனைவி பின்னர் தனது கணவருக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி, பாண்டி என்பவருக்கு 9வது இலக்க சொத்தில் 25 சென்டை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1987, 1995ம் வருடத்திய பத்திரங்களை செல்லாது என கூற எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் எழுதப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படியான பத்திரங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையில்லை என்பதால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.